1971 ஜூலை 30]

புத்தாம்பூர் குளம்

* 568 வினு— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புத்தாம்பூர் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்க உத்திரவிடப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இது அரசு ஆய்வில் உள்ளதனுல் எப்பொழுது உத்திர விடப்படும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

சாத்தனூர் அணையிலிருந்து கால்வாய் வெட்டுதல்

* 569 வினு—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து பெண்ணையாற்றுக்குத் தென்புறம் வாய்க்கால் வெட்டி பாசன வசதி செய்வதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சாத்தனூர் அணையின் (pick up anicut) வலது புறக்கால்வாய்த் திட்டத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம் தாலூகாவிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி தாலூகாவிலும் சுமார் 10,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ. 90.00 லட்சம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, சாத்தனூர் டாமை வெளிநாட்டினரைக் கவரக் கூடியவகையில் மேலும் அழகு படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கேள்வி மாண்புமிகு பிற்பட்ட நலத்துறை அமைச்சருக்குப் போடலாம்.

திரு. ந நாச்சியப்பன் : தலைவரவர்களே, இந்த வாய்க்கால் திட்டத்தை அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் நீண்ட நாட்களாக அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அமைச்சர் ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியது போல், பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.